என்பதை இந்த அவையில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். யாரும் அச்சப்படத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள், என்ன சொல்லுங்கள்.

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், என்ன சொல்ல வருகிறீர்கள்?

திரு. எம். தமிமுன் அன்சாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் யாரும் பாதிக்கப்பட மாட்டார்கள் என்ற வாக்குறுதியைத் தந்திருக்கிறார்கள். அது அவருடைய நல்ல உள்ளத்தைக் காட்டுகிறது. அதை நான் மதிக்கின்றேன். ஆனால், பீஹார் மாநிலத்தைப்போல் ஒரு தீர்மானம் போடுவதுதான் பாதுகாப்பான ஒரு நம்பிக்கையை ஏற்படுத்தும் என்பதைக் கூறி, அதை நிறைவேற்றாத காரணத்தினால், நானும் இதனைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கின்றேன்.

(மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். தமிமுன் அன்சாரி அவர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.)

3. அறிவிப்புகள்

(அ) மானியக் கோரிக்கைகள், 2020-2021, முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2020–2021 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளைப் பேரவையில். . . (குறுக்கீடுகள்) அவையெல்லாம் ஆய்வில் உள்ளன. மானியக் கோரிக்கைகளைப் பேரவையில் முன்மொழிவது குறித்து மேதகு ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்காணும் செய்தி வரப்பெற்றுள்ளது:

"In pursuance of clause (3) of Article 203 of the Constitution of India, I, Banwarilal Purohit, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving, in the Tamil Nadu Legislative Assembly, of the Demands for Grants for the Financial Year 2020–2021."

(குறுக்கீடுகள்) அவையெல்லாம் என் ஆய்வில் உள்ளன, உட்காருங்கள்.